1982 மார்ச் 23]

தமிழகத்தில் உற்பத்தியாகும் பனை வெல்லம்.

*வினா எண். 624—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு ஆண்டுக்கு தமிழகத்தில் உற்பத்தியாகும் பனை வெல்லத்தின் அளவு என்ன ?

(ஆ) தமிழகத்திலிருந்து பனை வெல்லம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா ?

(இ) ஆம் எனில் அதன் அளவு என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, (அ) 1980–81 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உற்பத்தியான பனைவெல்லத்தின் அளவு 59,645 மெட்ரிக் டன்களாகும். மதிப்பு ரூ. 12,57·77 இலட்சம் (பன்னிரண்டு கோடியே ஐம்பத்தி ஏழு இலட்சத்து எழுபத்தி ஏழாயிரம் ரூபாய்).

(ஆ) மற்றும் (இ) தமிழகத்திலிருந்து அமெரிக்காவுக்கு 1979–80ல் பரிட்சார்த்தமாக 37 டன் பனை வெல்லப்பாகு அனுப்பப்பட்டது. அதனுடைய மதிப்பு இரண்டு இலட்சத்து அறுபத்திஆறாயிரம் ரூபாய்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பதனீர் இறக்கும் தொழிலிலும் வெல்லம் தயாரிக்கும் தொழிலிலும் எத்தனை தொழிலாளர்கள் வேலைசெய்கிறார்கள். அவர்களிலே எவ்வளவு பெண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, தமிழகத்திலே 1980–81 ஆம் ஆண்டிலே, 1,23,000 பேர் பதனீர் இறக்குவதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். 82,000 பெண்கள் பனைவெல்லம் உற்பத்தி செய்வதிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலுக்காக மாநில இணையம் கதர் வாரியத்திடமிருந்து ஏதாவது நிதியுதவி பெற்றிருக்கின்றதா ? அப்படியானால் கடந்த ஆண்டுகளில் பெறப்பட்ட நிதி எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எள். என். இராசேந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கதர் வாரியத்திடம் பனைத்தொழில் சம்பந்தமாக மாநில இணையம் இந்த திட்டத்திற்காக நான் காண்டுகளில்பெற்றுள்ள நிதியுதவியின் விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

ஆண்டு.	கடன்.	மானியம்
(1)	(2)	(3)
1977–78	21,13,500	4,20,384
1978–79	34,04,500	5,07,190

1979–80-ல் ரூ. 31,57,500. இதில் மானியம் ரூ. 4,88,350 1980–81-ல் பெறப்பட்ட கடன் ரூ. 43,53,000. மானியம் ரூ. 14,29,196. 1981–82-ல் கடனாகப் பெற்றது ரூ. 23,22,500. இதில் மானியம் ரூ. 17,27,252 ஆகும்.

திரு. எம். சின்னசாமி : அமெரிக்காவிற்கு மட்டும்தான் ஏற்றுமதி செய்வதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். வேறு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகள் நடைபெறுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : இதற்கு ஜெர்மன், இட்டாலி போன்ற நாடுகளிலிருந்தும் மாதிரி பனை வெல்லம் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய கொட்டேஷன் கேட்கப்பட்டிருக்கிறது. அந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். சின்னசாமி : இந்த பனைவெல்லத்தை மாநிலத்தி லிருந்து தனியார் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : நம் தனியார் ஏற்றுமதி செய்வதுபற்றி குறிப்பு இல்லை வாரியத்தின் வாயி லாக நாம் அனுப்பிக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரரல் அவ்வுரை சரிபார்க் கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS